

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்ஷா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிப்பது குறித்து விவாதித்தனர்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்ஷா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில் முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் நேற்று முன்தினம் 23.07.2024 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்களின் திறனாய்வு கூட்டம் சென்னை டி.எம்.எஸ் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

### அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியம் சார்பில்

# 19.16 லட்சம் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்!

*சென்னை, ஜூலை 25-*

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் 19,16,292 தொழிலாளர்களுக்கு ரூ. 16,64,70,99,480 நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சி.வி. கணேசன் அறிவித்துள்ளார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (23.07.2024)அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்களின் திறனாய்வு கூட்டம் சென்னை டி.எம்.எஸ் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 20 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 22.07.2024 அன்றுள்ளவாறு மொத்தம் 44,61,486 தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து பயன் பெற்று வருகின்றனர்.

மாவட்ட அளவில் வாரிய பணிகளான பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனுக்கள் பெறுதல் மற்றும் ஒப்பளிப்பு செய்து பணப்பயன்களை தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்புதல் ஆகிய பணிகள் 40 தொழிலாளர் உதவி ஆணையர்களால் (சமூக பாதுகாப்பு திட்டம்) இணையதள வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், விபத்து மரணம், இயற்கை மரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் புதியதாக 16,78,138 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். மேலும், 19,16,292 தொழிலாளர்களுக்கு ரூ.16,64,70,99,480 நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 08.06.2024 அன்று அமைச்சர் அவர்களின் தலைமையில் பணித்திறனாய்வு கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மக்களவை தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக நிலுவையில் உள்ள கேட்பு மனுக்களை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 3,71,922 தொழிலாளர்களுக்கு ரூ. 2,16,09, 70,623 நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

பிற துறைகளுடன் சரிபார்ப்பு பணிகளுக்காக நிலுவையில் உள்ள கேட்பு மனுக்களையும், விவரங்களை விரைவில் பெற்று கேட்பு மனுக்களை காலதாமதமின்றி விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

### புதுக்கோட்டை மாவட்டம் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்!

# மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாம் - மக்களிடம் கோரிக்கை மனுக்கள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப் பாண்டியன் பெற்றனர்!

*புதுக்கோட்டை, ஜூலை 25-*

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையூர் கிராமம், முத்து லெட்சுமி திருமண மஹாலில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா, தலைமையில் 23.07.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்கள்.

பின்னர், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், பயனாளிக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்திடும் வகையில் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கறம்பக்குடி வட்டம், மழையூர் கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் நேரில் பார்வையிடப்பட்டது.

இம்முகாம்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

எனவே இம்முகாம்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா,

புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ. பாஞ்சாலன், கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் மாலா ராஜேந்திரதுரை, வட்டாட்சியர் ஜபருல்லா, வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துராமன், ஊராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வி தர்மராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு

# வங்கி உரிமம் வழங்கிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.வலியுறுத்தல்!



*நாமக்கல், ஜூலை 25-*

டெல்லியில் மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு உரிமம் வழங்கிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு வங்கி உரிமம் தேவைப்படுகிறது. கடந்த 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் இருந்து நாமக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில், தற்போது பால் மற்றும் கோழி வளர்ப்பில் வலுவான இருப்புடன் பொருளாதார மையமாக உருவெடுத்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் விவசாயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பான்மையானோர் விவசாயக் கடன், பால்பண்ணை மற்றும் கைத்தறி நெசவாளர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கத்தினர் பெருமளவில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சங்கம் மற்றும் பொதுமக்கள் வழங்கிய நிலையான வைப்புத் தொகை சுமார் ரூ.1000 கோடி டெபாசிட்கள் கொண்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்து அக்குழு நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவ பரிந்துரை செய்துள்ளது.

இப்பரிந்துரையின் படி,வங்கி முறையாக நிறுவப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1983 ன் கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த மார்ச் 13, 2024 அன்று வங்கி செயல்படத் தொடங்கியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான வங்கி உரிமத்திற்கான விண்ணப்பம் நபார்டு மூலம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு உரிமம் வழங்க இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கிகளுக்கு நிதியமைச்சகம் ஆலோசனை வழங்க வேண்டும்.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட

# ஒன்றியச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி அறிவிப்பு!



*விழுப்புரம், ஜூலை 25-*

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.கழகத்திற்கு உட்பட்ட ஒன்றிய செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெற உள்ளது என மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி அறிவித்துள்ளார்.

அது வருமாறு:-

மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா , இரா. இலட்சுமணன், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகிக்க,

மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்று மாவட்டக் கழக பணிகள் செவ்வனே நடைபெற மாவட்ட கழகத்திற்கு புதிய பொறுப்பாளரை நியமித்த கழகத் தலைவருக்கும் பொதுச்செயலாளருக்கும் கழக இளைஞர் அணி செயலாளருக்கும் நன்றி தெரிவிக்கவும்,

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை செவ்வனே கொண்டாடவும், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் களப்பணியாற்றிய கழகத்தினருக்கும் வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுகொள்கிறேன்.

ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு:-

26.07.2024 வெள்ளிக் கிழமை

முகையூர் (வடக்கு), மணம்பூண்டி, முகையூர் (தெற்கு), அரகண்டநல்லூர் பேரூர் - மாலை 5.00 மணி - MKMS பேப்பர் மில் வளாகம் (வடகரைதாழனூர் TO அரகண்டநல்லூர் சாலை), அரகண்டநல்லூர்

27.07.2024 சனிக்கிழமை

கண்டமங்கலம் (கிழக்கு), கண்டமங்கலம் (மேற்கு), கண்டமங்கலம் (மத்திய) -காலை 10.00 மணி - வள்ளி திருமண மண்டபம் கண்டமங்கலம்

வானூர் (கிழக்கு), வானூர் (மேற்கு), கிளியனூர், கோட்டக்குப்பம் நகரம் - காலை 12.00 மணி - பிருந்தாவன் கன்வென்ஷன் சென்டர், வானூர்

விழுப்புரம் நகரம், வளவனூர் பேரூர்-மாலை 5.00 மணி -கலைஞர் அறிவாலயம், விழுப்புரம்

28.07.2024 ஞாயிற்றுக்கிழமை காணை (தெற்கு), காணை ( வடக்கு), காணை (மத்திய)- காலை 10.00 மணி -நிலா மெட்ரிகுலேஷன் பள்ளி, கொசப்பாளையம்.

விக்கிரவாண்டி (கிழக்கு), விக்கிரவாண்டி (மேற்கு), விக்கிரவாண்டி (மத்திய), விக்கிரவாண்டி பேரூர் - மதியம் 12.00 மணி- எஸ்.ஆர். திருமண மண்டபம் பனையபுரம் விக்கிரவாண்டி.

கோலியனூர் (கிழக்கு), கோலியனூர் (மேற்கு), கோலியனூர் (தெற்கு) - மாலை 5.00 மணி - வசந்தம் திருமண மண்டபம், கோலியனூர்.

29.07.2024 திங்கள்கிழமை

திருவெண்ணெய்நல்லூர் (மே), திருக்கோவிலூர் (கிழக்கு), திருக்கோவிலூர் நகரம், திருவெண்ணெய்நல்லூர் பேரூர் - காலை 10.00 மணி - P.S மஹால் மணக்குப்பம்

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (23.07.2024) நடைபெற்றது. உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வன அலுவலர்கள் கௌதம், (உதகை), வெங்கடேஷ், (கூடலூர்), முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் அருண் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியம், சோமவாரப்பட்டி ஜி.கே.மஹால் திருமண மண்டபத்தில் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் பொதுமக்களிடம் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், ஒன்றிய கழக செயலாளர் அனிக்கடவு கிரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.